# சாட்சியின் சாட்சியம்

## ( பகுதி XXIII குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது)

## குற்றவியல் நீதித்துறை நீதிமன்றம், திருவொற்றியூர்

**CC.NO./244/2021**
**15.05.2023**
**PW-4**

பெயர்**:** கோபி

தகப்பனார் பெயர்**:** வீரராகவலு

வயது**: 63**

எதிரி ஆஜர்

**(Solemnly Affirmed before this Court Under Act X of 1969)**

முதல் விசாரணை**:-**

1. நான் நந்தியோடை என்ற பகுதியில் வசித்து வருகிறேன். தற்போது வேலைக்கு செல்லவில்லை வீட்டில் தான் உள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது அல்ல. ( சாட்சி பார்வை மகஜர் உள்ள கையொப்பத்தை தன்னுடையது அல்ல என்று கூறினார்). வழக்கை பற்றி வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின்படி சாட்சி பிறர் சாட்சியாக பாதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 17 2 2021 அன்று காலை 7 மணிக்கு சம்பவ இடத்தை திருவொற்றியூர் போலீசார் பார்வையிட்டு என் முன்னிலையில் பார்வை மகேஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்று போலீசாரிடம் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.